பாண்டிச்சேரியில் பயிற்சி முகாம்



# ‘இதெல்லாம் வரைய முடியும்னு நான் நினைச்சே பார்க்கலே!’’



பூமாவும், ராஜ்குமாரும் கற்றுத் தருகிறார்கள்.



## -பரவசத்துடன் பாண்டி வாசகிகள்

‘பொதுவாக இந்தப் பத்திரிகைகள் தமிழகத்தில் எந்த விழா அல்லது வேறு நிகழ்ச்சிகள் வைத்தாலும், அதென்னவோ பாண்டிச்சேரியை மட்டும் மறந்துடறாங்க! நல்ல வேளை, நீங்க மறக்காம எங்க ஊருக்கு வந்தீங்களே!’ என்று சிறு ஏக்கம் கலந்த உற்சாகத்துடன் வரவேற்றார்கள் பாண்டிச்சேரிப் பெண்கள்!

நமது ‘குமுதம் சிநேகிதி’ கேம்லின் நிறுவனத்துடன் இணைந்து நடத்திய பயிற்சி முகாமில் நடந்த விஷயம்தான் இது.

கொடூரமான சுனாமியின் கோரப் பாதிப்புகள் நிகழ்ந்த பாண்டியின் சுற்று வட்டார ஏரியாக்களில் இருந்துகூட கற்றுக்கொள்ளும் ஆர்வத்துடன் வந்திருந்தார்கள் பல பெண்கள்.

“இந்தப் பயிற்சி எங்களில் சிலர் வாழ்க்கையில் ஒளியேற்றவே உதவும்...!” என்று கற்று முடிந்த தினம் நெகிழ்ச்சியுடன் சொன்னார் கலாவதி என்பவர்.

கடலூரில் இருந்து சந்திரா, மாதங்கி உட்பட பல வாசகிகள் வந்திருந்தார்கள்.







கலர் மெஹந்தி போட்டுக் காட்டுகிறார் அமுதா



